JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//458 /2018 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | **கணேசன்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 12.06.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் பூக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் தான் காரை அதிக வேகமாக ஒட்டி வந்தார். இந்த வழக்கில் இறந்து போன மாரியப்பன் என்னுடைய தெருக்காரர். அசா.1 சுப்பிரமணியன் என்பவரையும் தெரியும். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு இரவு 9.45 முதல் 10.00 மணி அளவில் கேரளாவில் பூ எடுக்கும் தொழிலுக்காக நான் ஒரு நாளைக்கு மதியம் மற்றும் இரவு செல்வது வழக்கம். பல்க் அருகே ஓரமாக நின்று கொண்டிருந்த சமயம் இறந்து போன மாரியப்பன் இருசக்கர வாகனமான Shine வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது அவருக்கு எதிராக மாதிரி காரை ஆஜர் எதிரி வேகமாக வந்து உரசி கீழே தள்ளி இழுத்து சென்ற போது அதிக சத்தம் கேட்டு நான் பார்த்தேன். மாரியப்பனுக்கு வலது காலிலும், தலையில் பின்பக்கமும்அடிபட்டு இருந்தது. மாரியப்பனுடன் வேலை பார்க்கும் நபரான பழனிச்சாமி என்பவர்

பின்னாடி வந்தார். 108 ஆம்புலன்ஸ் மூலம் தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மாரியப்பனின் தகப்பனாருக்கும் தகவல் சொன்னோம். இது சம்பந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தென்காசியில் பூக்கடை வைத்துள்ளேன். கேரளாவிற்கு பூ கட்டி மாலையாக அனுப்புவேன். காலையில் 7.00 மணிக்கெல்லாம் கடைக்க சென்றுவிடுவேன். இரவு 11.00 மணி வரை வேலை இருக்கும். நான் 15 ஆண்டுகளாக பூ வியாபாரம் செய்கிறேன். எனக்கு அப்போதிருந்தே எனக்கு கீழ் வேலை செய்யும் நபர் உண்டு என்றால் சரிதான். எந்த நபரிடம் எந்த இடத்தில் வைத்து கேரளாவிற்கு பூ கொடுப்பேன் என்றால் குத்துக்கல்வலசை, பல்க் சைடில் நின்று கொடுப்பேன் மற்றொரு இடம் அதற்கடுத்த Turning ல் வைத்து கொல்லம் மாவட்டத்தை சேர்ந்த சுர்ராஜ் என்பவரிடம் கொடுப்பேன். எனக்கு சுர்ராஜ் முகவரி நன்கு தெரியும். தினமும் பூ வண்டி செல்லும் அதில் போகும் டிரைவரிடம் பூ கொடுப்பேன். டிரைவர் பெயர் தெரியுமா என்றால் ராஜ். தற்போது வண்டியை விட்டு நின்று விட்டார். பூ கொடுத்தது எந்த நபரிடம் என்றும், எந்த வண்டி என்றும், டிரைவர் பெயர் என்னவென்றும் என்னால் நீதிமன்றத்தில் சொல்ல முடியாது என்றால் கேரளாவிற்கு 10 வண்டிகள் போய்க் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வண்டி சொல்வார்கள்.

நான் சம்பவம் நடந்த அன்று பூ கொடுக்க போனது எனக்கு கீழ் வேலை பார்க்கும் நபருக்கு தெரியும் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் தெரியவரும். சம்பவ சமயத்தில் எனக்கு கீழ் வேலை பார்த்த நபரின் பெயர் குமார். சம்பவத்தன்று விபத்து நடந்த பிறகு மருத்துவமனைக்கு எங்களுடன் மாரியப்பனின்தகப்பனார் வந்தாரா என்றால் இல்லை. குத்துக்கல் வலசையில் ஒரேயொரு பெட்ரோல் பல்க் தான் உள்ளது என்றால் சரிதான். குத்துக்கல் வலசை பேருந்து நிலையைத்திற்கும் பெட்ரோல் பல்க்கிற்கும் ஒரு கி.மீ தூரம் இருக்கும். நான் பெட்ரோல் பல்க் அருகில் நிற்கும் போது தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டு தான் அந்த இடத்தில் போய் பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் வண்டி இழுத்து வந்ததை நான் நேரடியாக பார்த்தேன். சுப்பிரமணியனை எனக்கு எத்தனை ஆண்டுகள் தெரியும் என்றால் 10 ஆண்டுகளாக தெரியும். இறந்து போன மாரியப்பனை 6–7 ஆண்டுகளாக தெரியும்.

நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல என்னை யார் அழைத்து

வந்தார் என்றால் காவல்நிலையத்தில் இருந்து போன் செய்தார்கள். வரும் போது என்னுடன் சுப்பிரமணியன் வந்தாரா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் வழக்கின் புகார் தாரர் சுப்பிரமணியனும், அவரது மகன் மாரியப்பனும் எனக்கு மிகவும் நெருக்கமானவர் என்பதால் நடக்காத சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பூக்கடையில் ஏழு மணியிலிருந்து 11.00 மணி வரை கடையில் இருப்பேன் என சாட்சியம் சொல்லி விட்டு தற்போது வழக்கிற்காக ஒரு வாகனத்தில் பூ கொடுக்க சென்றேன், ரூபாய் கொடுக்க சென்றேன் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பூ கொடுக்க சென்ற வண்டியின் எண் ஞாபகம் இல்லை. யாரிடம் பூ கொடுத்தேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றாலும் அந்த நபரின் முழுவிபரத்தையும் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. வாகனம் வேகமாக ஓட்டி வந்தார் என சொல்லி உள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//458 /2018 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | சுப்பிரமணியன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 12.06.2025

முதல் விசாரணை

நான் தற்போது தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன மாரியப்பன் என்னுடைய மகன். 08.03.2018ம் தேதி என் மகன் இடைகாலில் உள்ள சைட்டுக்கு சென்று விட்டு திரும்ப வரும் போது எனது மகன் கம்பெனியின் இருசக்கர வாகனமான Honda Sine ல் சென்று விட்டு திரும்ப வரும் போது அண்ணாநகர் ஸ்டாப் ஆஞ்சநேயர் கோவில் பக்கத்தில் கார் வந்து மோதி விட்டதாக என் மகனுடன் வேலை பார்த்த நபர் என்னிடம் போன் மூலம் தகவல் தெரிவித்தார். மாருதி கார் அந்த காரை செய்யது மசூது என்பவர் ஓட்டி வந்ததாகவும் தகவல் தெரிவித்தார். அதன் பிறகு நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். எனது மகனுக்கு பின்னந்தலையில் அடிபட்டு ரத்தம் வந்தது. வலது காலிலும் அடிபட்டு ரத்தம் வந்தது. சம்பவ இடத்திலேயே எனது மகன் இறந்து விட்டான். பின்னர் தென்காசி அரசு மருத்துவமனைக்கு இறந்து போன என் மகனை

பிரேத பரிசோதனை செய்வதற்காக கொண்டு சென்றார்கள். பின்னர் அங்கு இருந்து பிரேத பரிசோதனை முடிந்ததும் என் மகனை நல்லடக்கம் செய்ய என் மகனின் உடலை வாங்கி விட்டோம். பின்னர் தென்காசி காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அசா.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். புகார் மனுவில் அனுப்புநர், பெறுநர் என்று குறிப்பிட்டு புகார் மனுவில் எழுத தெரியுமா என்றால் எழுத தெரியும். அன்றைய தினம் நான் இருந்த சூழ்நிலையில் தகவலாக சொன்னேன். நான் சொன்ன தகவலின் அடிப்படையில் தான் புகார் மனு எழுதினார்கள் என்றால் சரிதான். தென்காசி காவல்நிலையத்தில் புகார் எழுதியது ஆண் காவலரா, பெண் காவலரா என்றால் ஆண் காவலர். அவர் பெயர் தெரியாது. புகார் கொடுக்க எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 10.30 மணிக்கு சென்றேன். புகார் கொடுப்பதற்கு யாரெல்லாம் சென்றோம் என்றால் என் மகனுடன் பணிபுரியும் சக நபர்கள் வந்தார்கள். புதியவன், பழனிச்சாமி, கணேசன் ஆகியோர் வந்தார்கள். விபத்து நடந்த இடத்திற்கு சென்ற பின்னர் நேராக காவல்நிலையம் சென்றேன். விபத்து நடந்து 45 நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு சென்றேன். அதன் பிறகு எவ்வுளவு நேரம் கழித்து காவல்நிலையம் சென்றேன் என்றால் 10 நிமிடத்தில் சென்றேன். என் மகன் காத்தாடியில் வேலை பார்க்கும் நிறுவனத்தின் பெயர் நிபா. என் மகன் ஓட்டிய வாகனத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் என் மகன் மட்டும் தான் வந்தான். கணேசன், பழனிச்சாமி எனது உறவினரா என்றால் இல்லை. கணேசன் மட்டும் என் தெருக்காரர். பழனிச்சாமி என் மகனுடன் வேலை பார்த்த நபர்.

விபத்து சம்பந்தமாக எந்த செல்போன் எண்ணிலிருந்து வந்தது என்றால் செல்போன் எண் தெரியாது. எத்தனை மணிக்கு போன் வந்தது என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். விபத்து நடந்த விவரம் போனில்தகவல் சொன்னார்கள் என்று நான் சொல்லி உள்ளது உண்மையல்ல என்றாலும் நான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்று தான் என் மகனை பார்த்தேன் என்றாலும் சரியல்ல. எனக்கு எதிரியின் பெயர் தெரியாது என்றாலும் போலிஸார் சொல்லி தான் எதிரியின் பெயர் தெரியும் என்றாலும் சரியல்ல. விபத்து ஏற்பட்ட அன்று என் மகன் வந்த வாகனத்தின் எண் தெரியாது. எதிரே வந்து மோதியதாக சொல்லும் காரின் எண் 3016 ஆகும். எனக்கு விபத்து சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றாலும் புகார் மனு நான் எழுதவில்லை என்றாலும் போலிஸார் எழுதியதில் நான் கையெழுத்து மட்டும் போட்டேன் என்றும் அதனால்தான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இறந்து போன நபர் எனது மகன் என்பதால் நீதிமன்றத்தில்

அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் எதிரி சாலை விதிகளை கடைபிடித்து இடது ஓரமாக தான் வந்தார் என்றாலும் எனது மகன் தான் கவனக் குறைவாக வாகனத்தை ஓட்டி வந்து விபத்துக்கு காரணமானார் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi